23.01.2017

# 9 கால்நடைக் கிளை நிலையங்கள் தரம் உயர்வு: அமைச்சர் எம்.சி.சம்பத் தகவல்



கடலூர் மாவட்டத்தில் 9 கால்நடைக் கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக தொழில் துறை அமைச்சர் அமைச்சர் எம்.சி.சம்பத் கூறினார். அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், மாளிகைமேட்டில் உள்ள கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டது. தரம் உயர்த்தப்பட்ட மருந்தக திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் த.பொ.ராஜேஷ் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பண்ருட்டி எம்எல்ஏ சத்தியா பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார்.

தமிழக தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் பங்கேற்று, மருந்தகத்தை திறந்து வைத்துப் பேசியதாவது: ஜல்லிக்கட்டு தொடர்பான அவசரச் சட்டத்தை 24 மணி நேரத்தில் தமிழக அரசு பிறப்பித்தது. தமிழக கால்நடை பராமரிப்புத் துறை மூலம் 2016-17-ஆம் நிதியாண்டில் மாநில அளவில் 100 கால்நடை கிளை நிலையங்களை தரம் உயர்த்தி, கால்நடை மருந்தகங்களாக மாற்ற ஆணையிடப்பட்டது. இதற்கான கூடுதல் செலவினம் ரூ.9.92 கோடியாகும்.

இதில் கடலூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 9 கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதற்காக தமிழக அரசு ஒரு கால்நடை மருந்தகத்துக்கு ரூ.9.92 லட்சம் வீதம் ரூ.89.28 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதியை மருந்துகள் வாங்குவதற்கும், அலுவலகச் செலவினங்களுக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாவட்டத்தில் கடலூர் ஒன்றியம் திருவந்திபுரம், பண்ருட்டி ஒன்றியம் பேர்பெரியான்குப்பம், காடாம்புலியூர், மாளிகம்பட்டு, கம்மாபுரம் ஒன்றியம் சேப்ளநத்தம் (தெற்கு), விருத்தாச்சலம் ஒன்றியம் தொரவளூர், மங்களூர் ஒன்றியம் எடைச்சித்தூர், நல்லூர் ஒன்றியம் பெலாந்துரை உள்ளிட்ட 9 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக மாற்றப்பட்டுள்ளன.

கால்நடை உதவி மருத்துவர்களும், ஆய்வாளர்களும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர உதவியாக இருக்க வேண்டும் என்றார் அமைச்சர். நிகழ்ச்சியில், அதிக பால் கறக்கும் ராஜஸ்தான் ரத்தி இன பசு, மாளிகைமேட்டைச் சேர்ந்த இயற்கை விவசாயி சதீஷ்குமாருக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஆவின் துணைத் தலைவர் இ.செல்வராஜ், மாளிகைமேடு பால் உற்பதியாளர்கள் சங்க முன்னாள் தலைவர் பி.ரங்கராமானுஜம், கால்நடை உதவி மருத்துவர் வேல்முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். முன்னதாக கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பி.மோகன் வரவேற்க, மாளிகைமேடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஜெகதீசன் நன்றி கூறினார்.

**நம்பியம்பட்டு மழைவாழ் மக்களுக்கு இயற்கை வழி சாமை சாகுபடிப் பயிற்சி**



போளூரை அடுத்த ஜவ்வாதுமலை ஒன்றியம், நம்மியம்பட்டு கிராமத்தில் மலைவாழ் மக்களுக்கு இயற்கை வழி சாமை சாகுபடி குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. முகாமுக்கு வேளாண் உதவி இயக்குநர் வடமலை தலைமை வகித்தார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பூச்சியியல் வல்லுநர் ஸ்ரீதரன், மலைவாழ் மக்களுக்கு இயற்கை முறையில் சாமை சாகுபடி செய்தல் மற்றும் தங்களது குடும்பத்துக்குத் தேவையான வெண்டை, கீரை, காய்கனி தோட்டம் அமைத்தல் குறித்து பயிற்சி அளித்தார். மேலும், உதவிப் பேராசிரியர் சரவணன் மற்றும் வேளாண் அலுவலர்கள் கலந்துகொண்டு, இயற்கை முறை விவசாயம் குறித்து பயிற்சி அளித்தனர். இதில், நம்பியம்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த மலைவாழ் மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

**இயற்கை விவசாயத்துக்கு அதிகளவில் அரசு மானியம் வழங்க வேண்டும்: கருத்தரங்கில் விவசாயிகள் வலியுறுத்தல்**



குத்தாலம் வட்டம், எலந்தங்குடி ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் அங்கக ஆராய்ச்சி பயிலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற "இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் வழி' விவசாய கருத்தரங்கில், இயற்கை விவசாயத்துக்கு அதிகளவில் அரசு மானியம் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்திப் பேசினர்.

கருத்தரங்குக்கு தமிழக இயற்கை உழவர் இயக்க மாநில தலைவர் அம்பலவாணன் தலைமை வகித்தார். பாலையூர் ரங்கநாதன், காரைக்கால் அரசு மருத்துவர் உமாமகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
இதில் எழுத்தாளரும், இயற்கை வேளாண் ஆர்வலருமான நக்கீரன் பேசியது:

நிகழாண்டு வடகிழக்குப் பருவமழையும் பொய்த்துப்போய் கடும் வறட்சி நிலவுகிறது. பருவநிலை மாற்றத்துக்கு மனிதன் தான் முக்கியக் காரணம். மேற்கு தொடர்ச்சி

மலைகளில் உள்ள காடுகளை அழித்து, அங்கு தேயிலை தோட்டத்தை அமைத்ததாலேயே மழை பொய்த்துள்ளது என்றார்.

ஆராய்ச்சி பயிலக நிறுவனர் அல்லீஸ் பாக் பேசியது:ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளை அதிகமாக பயன்படுத்துவதால் மண் மலட்டுத்தன்மையாக மாறிவருகிறது. தேங்காய் நாரால் தயாரிக்கப்பட்ட உரங்கள், மண்புழு உரங்கள் என்று இயற்கை உரங்களை பயன்படுத்தினால் மண் நன்றாக இருப்பதோடு நீரை உறிஞ்சி தேக்கி வைக்கும் என்றார். நமது பாரம்பரிய நெல் ரகங்களையும், நாட்டு மாடுகள் மற்றும் இயற்கை விவசாயத்தையும் ஊக்குவிக்க தமிழக அரசு அதிகளவில் மானியம் வழங்க வேண்டும் என கருத்தரங்கில் விவசாயிகள் வலியுறுத்திப் பேசினர்.

இதில் சுற்றுச்சூழல் வல்லுநர் சுல்தான் இஸ்மாயில், எழுத்தாளர் பாரதிநாதன், மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பு இணை ஒருங்கிணைப்பாளர் இரணியன், பாரம்பரிய நெல் காப்பாளர் அசோகன், பிரபாகர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கருமந்துறையில் தோட்டக்கலை வளர்ச்சித் திட்டப் பணிகள் ஆய்வு**

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், கருமந்துறை பகுதியில் தோட்டக்கலைத் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் நேரில் ஆய்வு செய்தார்.

அப்போது மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் பேசியது: பருவமழை தமிழகத்தில் போதிய அளவு பெய்யாத காரணத்தால் தமிழக அரசு விவசாயிகள் நுண்ணுநீர்ப் பாசனம் மூலம் சாகுபடி செய்திட மானியம் வழங்கி வருகிறது.



குறிப்பாக சேலம் மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டுக்கென நுண்நீர்ப் பாசனத்துக்கு அனைத்து சிறு, குறு விவசாயிகளுக்கும் 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. நிலப் போர்வை அமைத்திட அனைத்து விவசாயிகளுக்கும் தோட்டக்கலைத் துறை மூலம் 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. மேலும், நிரந்தர கால்பந்தல் அமைத்துக் கொடிவகை சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க மானியமாக ஹெக்டேருக்கு ரூ.2 லட்சம் வழங்கப்படுகிறது.

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் பயிர் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கில் மா, கொய்யாவில் அடர்நடவு செய்யவும், பப்பாளி போன்ற பழ வகை கன்றுகள் விவசாயிகளுக்கென இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும், பழைய மா மரங்களை கவாத்து செய்து

விளைச்சலை அதிகரிக்க 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வெங்காயம் உற்பத்தியில் உயர் விளைச்சல் பெரும் வகையில் வெங்காய விதைகள், இடுபொருள்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் மருந்து கூர்கன், சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு ரூ.18,600 வரை மானியம் வழங்கப்படுகிறது. தேனீ வளர்ப்பு மூலம் விவசாயிகள் உற்பத்தி பெருக்கும் நோக்கோடு 40 சதவீத மானியத்தில் ஒரு தேனீ கூட்டத்துடன் உள்ள தேனீ பெட்டிக்கு ரூ.1,600 வீதம் வழங்கப்படுகிறது.

குளித்தட்டு முறையில் மஞ்சள் நாற்றுகள் உற்பத்தி செய்யும் வகையில் நிழல்வலை குடில்கள் அமைத்து மஞ்சள் நாற்று உற்பத்தியை அதிகரித்திட 50 சதவீத மானியத்தில் 400 சதுர மீட்டர் பரப்பளவுக்கு ரூ.1.42 லட்சமும், மேலும் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயனடைந்திட இடு பொருள்களுக்காக ரூ.14,750, பயிற்சிக்காக ரூ.1000 வீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற விரும்பம் உள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை விரிவாக்க அலுவலர்களை அணுகி பயன்பெறலாம் எனத் தெரிவித்தார்.

ஆய்வின் போது இணை இயக்குநர் (வேளாண்மை) சௌந்தரராஜன், துணை இயக்குநர் (தோட்டகலை) பிரபு, தோட்டக்கலை அலுவலர் கணேசன், வேளாண்மை

அலுவலர் ஜோஸ்வா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.